## பொது சேவை ஆணைக்குழு

## புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

## கலாசார அலுவல்கள் திணைக்களம்

## சிங்கள அகராதி அலுவலகத்தின் பிரதம ஆசிரியர் மற்றும் சிங்கள கலைக்களஞ்சிய அலுவலகத்தின் பிரதம ஆசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன (ஒப்பந்த அடிப்படையில்)

01. கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் நிலவும் கீழ்வரும் வெற்றிடப் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- சிங்கள அகராதி அலுவலகத்தின் பிரதம ஆசிரியர்
- சிங்கள கலைக்களஞ்சிய அலுவலகத்தின் பிரதம ஆசிரியர்

02. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026.10.16 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு, "கலாசார அலுவல்கள் பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 08 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அதற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

03. இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப A 4 (8.27x11.69) அளவிலான தாளில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

04. இப்பதவிகளுக்கான விண்ணப்பங்களை அனுப்பும் போது, விண்ணப்பிக்கும் பதவி விண்ணப்பம் அனுப்பபபடும் கடித உறையின் மேல் இடது பக்க மூலையில் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

05. விண்ணப்பப்படிவத்தை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகுதிகள் தொடர்பான விபரங்களை சரியாக உள்ளிட வேண்டும்.

06. நியமனம் மற்றும் சேவை நிபந்தனைகள் :

* ஊதியம் மாதாந்தம் ரூபா 150,000.00 கொடுப்பனவு வழங்கப்படும். (போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவாக ரூபா 50,000.00 இதில் உள்ளடங்கும்.)
* இப்பதவி ஒப்பந்த அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட பதவியாகும். நிரந்தர நியமனம் பெறுவதற்கோ அல்லது நிரந்தர உத்தியோகத்தர்களுக்குரிய சலுகைகளுக்கோ உரிமை இல்லை. இப்பதவிக்கான ஆட்சேர்ப்பு ஒரு வருட ஒப்பந்தக் காலத்திற்கு மட்டுமே.

07. **தகைமைகள்** :

7.1 கல்வித் தகைமைகள்:

01. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து கலாநிதிப் பட்டம் பெற்றிருத்தல்.

7.2 தொழில்சார் தகைமைகள் : பொருந்தாது.

7.3 அனுபவம்:

01. (i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சிரேஷ்ட பேராசிரியர், பேராசிரியர் அல்லது இணைப் பேராசிரியராக பதவியில் குறைந்தபட்சம் 10 வருட திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ii) அகராதி / கலைக்களஞ்சிய அலுவலகமொன்றில் ஆசிரியர் பதவியில் குறைந்தபட்சம் 05 வருட தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

Gazette.lk SINCE 2016 AMBITIONS REALIZED

02. ஆங்கில மொழி மற்றும் பாலி, சமஸ்கிருத மொழிகள் தொடர்பில் நிபுணத்துவ அறிவைப் பெற்றிருத்தல். (கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது வாய் மொழியாக கருத்துக்களை வெளிப்படுத்தும் திறனும் எழுத்தறிவும் பரிசோதிக்கப்படும்.)

7.4 உடற் தகைமைகள்:

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றவும், பதவியின் கடமைகளை நிறைவேற்றவும் போதுமான உடல் மற்றும் மனத் தகுதியைக் கொண்டிருக்க வேண்டும்.

7.5 ஏனைய தகைமைகள் :-

1. அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.
2. விண்ணப்பதாரர்கள் சிறந்த நற்பண்புடையவர்களாக இருக்க வேண்டும்.
3. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்காக, விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தல் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று 7.1 முதல் 08 வரை உள்ள அனைத்து தகுதிகளையும் முழுமையாக பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

08. **வயது** :

60 வயதுக்கு குறையாமலும் 72 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

09. **ஆட்சேர்ப்பு முறை** :

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது தகுதிகளும் பரிசோதிக்கப்படும்.

| *பிரதான துறை* | *அதிகபட்ச மதிப்பெண்கள்* | *தேர்வுக்காக கருதப்படும் குறைந்தபட்ச மதிப்பெண்கள்* |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 10 | பொருந்தாது |
| அனுபவம் | 30 | |
| அகராதி/கலைக்களஞ்சிய அலுவலகத்தில் சேவைக் காலம் | 10 | |
| மேலதிக மொழி அறிவு | 15 | |
| அச்சிடும் கலை தொடர்பான அறிவு | 15 | |
| ஆசிரியராக வெளியிடப்பட்ட கல்விசார் நூல்கள் | 15 | |
| நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தப்படும் திறமை | 05 | |
| மொத்தம் | 100 | |

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பேரில்,

செயலாளர்,
புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED